# திரைப்பட இயக்குநர் மணிரத்னம் பிறந்தநாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜீன் 3-**

**திரைப்பட இயக்குநர் மணிரத்னம் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**



அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

ஒவ்வொருநாளும்தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, தணியாத தாகத்துடன் சினிமாவை அணுகும் இயக்குநர் மணிரத்னம் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்!

அவரது பேரார்வம், புதிதாக வரும் இளைஞர்களுக்கும் பாடம்!

மனித மனங்களின் ஆழத்தை அழகுணர்ச்சியோடு வெளிப்படுத்தும் மேலும் பல படைப்புகளைத் மணிரத்னம் அவர்கள் வழங்கி மகிழ்விக்க விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள்: மடிப்பாக்கம் சே.சிந்தன் தலைமையில்

# மயிலை பாலாஜி நகரில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, ஜுன்.3-

ஜுன்-3 முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழாவையொட்டி மயிலை பாலாஜிநகரில் மடிப்பாக்கம் சிந்தன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியும், பெண்களுக்கு சொத்தில் சமபங்கு அளிக்க வேண்டும் என்ற சட்டத்தை உருவாக்கியவரும், சாதிய ஏற்றத்தாழ்வுகளை அகற்ற தமிழ்நாடு முழுவதும் பெரியார் சமத்துவபுரம் ஏற்படுத்தியவரும், தமிழ்நாட்டில் முதன்முதலில் ஐ.டி தொழில் நுட்பத்தைக் கொண்டுவந்து டைட்டல் பார்க்கை அமைத்தவரும், விவசாயத்தை பெருக்க ஒரே கையெழுத்தில் ஏழாயிரம் கோடியை தள்ளுபடி செய்தவரும். சிறுபான்மை சமுதாயத்திற்கு இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியவரும், குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தியவரும், அருந்ததியின மக்களுக்கு தனி இடஒதுக்கீட்டை கொண்டுவந்தவரும், இப்படி ஏராளமான சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி தமிழ்நாட்டின் வரலாற்றில் நீங்கா இடம்பிடித்த சமூகநீதிக்காவலர் முத்தமிழறிஞர் கலைஞரின் 103ஆம் ஆண்டு பிறந்தநாளை (ஜுன்-3) முன்னிட்டு சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி துணைச் செயலாளர் மடிப்பாக்கம் சே.சிந்தன் தலைமையில் நண்பகல் 12 மணிக்கு மயிலை பாலாஜி நகரில் பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு சென்னைத் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அறுசுவை உணவு வழங்கி சிறப்பிக்கிறார்.

இச்சிறப்புவாய்ந்த நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி கழகத்தின் நிர்வாகிகள், தோழர்கள், கழக முன்னோடிகள், கழகத்தின் அனைத்து அணிகளைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் பங்கேற்று சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், ஜுன் 3-

விழுப்புரம் மாவட்டப் பொறுப்பாளர் மத்திய டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளான இன்று (ஜுன் 3 ஆம் நாள்,) நமக்கான புத்தெழுச்சி நாளாகக் கொண்டாடப்படுவதை முன்னிட்டு இன்று (புதன்கிழமை) காலை 7:30 மணி அளவில் விழுப்புரம் நான்கு முனை சந்திப்பு (சிக்னல்) அருகில் இருந்து கலைஞர் அறிவாலயம் வரை பேரணியாகச் சென்று கலைஞர் அறிவாலயத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வும் அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் எனது தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைவர்கள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கிளைக் கழக செயலாளர், கிளை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 3/6/2026 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் நகர, ஒன்றிய, பேரூராட்சிகளில் உள்ள வார்டுகள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கருப்பு சிவப்பு இரு வண்ணக் கொடியேற்றியும், நலிந்தோருக்கும் ஏழை எளிய மக்களுக்கு, பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் ★புத்தெழுச்சி நாளை★ பெரும் எழுச்சியுடன் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

# எண்ணாத நாளில்லை!



- கலைஞர் திருமகனே!
  அஞ்சுகத்தாயின்
  ஒரேமகன்ஆகையால்
  நீஒன்றானவன்

- கருப்பென்றும்
  சிவப்பென்றும்
  இரண்டானவன்

- பிறந்தநாளால்
  மூன்றானவன்

- தியாகராயர்பெரியார்
  அண்ணாகலைஞர்என்ற
  வரலாற்றுவரிசையால்
  நான்கானவன்

- தமிழ்நாட்டுமுதலமைச்சராய்
  ஐம்முறைஆண்டதால்
  ஐந்தானவன்

- தமிழுக்குஇனிப்பு
  இந்திக்குக்கசப்பு
  ஏழைக்குஉப்பு
  வயிற்றில்கரைத்ததால்
  எதிரிக்குப்புளிப்பு
  வாதத்தில்உறைப்பு
  பித்தம்நீக்கும்துவர்ப்பு
  அறுவகைச்சுவைகளால்
  ஆறானவன்

- வாரமெல்லாம்செய்தியானதால்
  ஏழானவன்

- திசையெல்லாம்
  இசைபடவாழ்ந்ததால்
  எட்டானவன்

- கிரகங்களெல்லாம்சுற்றிவந்த
  சூரியன்என்பதால்
  நீநவமானவன்

- உன்னை
  எண்ணங்களாலும்
  சிந்திக்கலாம்;
  எண்களாலும்சிந்திக்கலாம்

- இன்று மட்டுமா
  உன் பிறந்தநாள்?
  உதய சூரியன் உதிக்கும்
  ஒவ்வொரு நாளும்
  உன் பிறந்தநாள்தான்

- கேள்விகளுக்கு
  விடையும்நீதான்
  தோல்விகளுக்கு
  மருந்தும்நீதான்

**கவிப்பேரரசு வைரமுத்து**


